## ஜனவரி – 17 – புதன்

### புனித வனத்து அந்தோனியார்

### நன்மை செய்வதா, தீமை செய்வதா? மாற் 3:4

---

### முதல் வாசகம் :1 சாமுவேல் 17:32 – 33, 37,40 - 51

தாவீது சவுலை நோக்கி, இவன் பொருட்டு யாருடைய இதயமும் கலங்க வெண்டியதில்லை உம் அடியானாகிய நானே சென்று அந்தப் பெலிஸ்தியனோடு போரிடுவேன் என்றார். அதற்குச் சவுல் தாவீதிடம் இந்தப் பெலிஸ்தியனை எதிர்த்துப் போரிட உன்னால் இயலாது. நீயோ இளைஞன் ஆனால் அவனோ தன் இளம் வயது முதல் போரில் பயிற்சியுள்ளவன்" என்றார். மேலும் தாவீது என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த ஆண்டவர் இந்தப் பெலிஸ்தியனின் கைக்கும் தப்புவிப்பார்" என்றார். அதற்குச் சவுல் தாவீதிடம் சென்று வா! ஆண்டவர் உன்னொடு இருப்பார்" என்றார். தாவீது தம் கோலைக் கையில் எடுத்துக் கொண்டார். நீரோடையிலிருந்து வழுவழுப்பான ஐந்து கூழாங்கற்களைத் தேர்ந்தெடுத்து இடையனுக்குரிய தம் பையில் போட்டுக் கொண்டார். தம் கவணைக் கையில் பிடித்துக் கொண்டு பெலிஸ்தியனை நோக்கிச் சென்றார். தன் கேடயமேந்துபவன் முன் செல்ல, அந்தப் பெலிஸ்தியனும் தாவீதை நோக்கி நடந்து அவரை நெருங்கினான். பெலிஸ்தியன் தாவீதை கூர்ந்து பார்த்து ஏளனம் செய்தான் ஏனெனில் அவன் சிவந்த மேனியும் அழகிய தோற்றம் உடைய இளைஞனாய் இருந்தான். அப்பெலிஸ்தியன் தாவீதைப் பார்த்து, "நீ கோலுடன் என்னிடம் வர நான் என்ன நாயா? என்று சொல்லி தன் தெய்வங்களின் பெயரால் தாவீதை சபிக்கத் தொடங்கினான். மீண்டும் பெலிஸ்தியன் தாவீதை நோக்கி அருகே வா, வானத்துப் பறவைகளுக்கும் வனத்து விலங்குக ளுக்கும் உன் உடலை இரையாக்குவேன்" என்றான். அப்பொழுது தாவீது பெலிஸ்தியனிடம் நீ வாளோடும் ஈட்டியொடும் எறிவேலோடும் என்னிடம் வருகிறாய் நானோ நீ இகழ்ந்த இஸ்ராயேலின் படைத்திரளின் கடவுளாகிய படைகளின் ஆண்டவர் தம் பெயரால் வருகிறேன். இன்றே ஆண்டவர் உன்னை என் கையில் ஒப்புவிப்பார். நான் உன்னை வீழ்த்தி உன் உடலைத் துண்டிப்பேன் பெலஸ்தியரின் பிணங்களை வானத்துப் பறவைகளுக்கும் பூவுலக விலங்குகளுக்கும் கையளிப்பேன் இஸ்ரயேலரிடையே கடவுள் இருக்கிறார் என்பதை உலகிலுள்ள எல்லாரும் இதனால் அறிந்துகொள்வர். மேலும் ஆண்டவர் வாளினாலும் ஈட்டியினாலும் மீட்கிறவர் அல்லர் என்று இந்த மக்கள்கூட்டம் அறிந்துகொள்ளட்டும் எனெனில் இது ஆண்டவரின் போர்! அவரே உங்களை எங்கள் கையில் ஒப்புவிப்பார்" என்றார். பெலிஸ்தியன் எழுந்து தாவீதை நோக்கி புறப்படுகையில் தாவீதும் அவனுடன் போரிட பெலிஸ்தியப் படைத்திரளை நோக்கி விரைந்து ஓடினார். தாவீது தம் பையில் கை வைத்து ஒரு கல்லை எடுத்தார் அதை கவணில் "வைத்து சுழற்றிப் பெலிஸ்தியனுடைய நெற்றியை குறி பார்த்து எறிந்தார். அந்த கல்லும் அவனது நெற்றிக்குள் தாக்கிப் பதியவே அவன் தரையில் முகம் குப்புற விழுந்தான். இவ்வாறு தாவீது கையில் வாளேதும் இன்றிக் கவணும் கல்லும் கொண்டு பெலிஸ்தியன் மீது வெற்றி கொண்டு அவனை வீழ்த்திக் கொன்றார். உடனே தாவீது ஓடி அந்தப் பெலிஸ்த்தியனின்மேல் ஏறிநின்றார் அவனது வாளை அதன் உறையிலிருந்து உருவி அவனைக் கொன்று அவன் தலையை கொய்தார்.

**பதில்பாடல் :** என் பாறையாகிய ஆண்டவர் போற்றி போற்றி

### நற்செய்தி : மாற்கு 3 : 1 - 6

அக்காலத்தில் இயேசு மீண்டும் தொழுகைக்கூடத்திற்குள் சென்றார். அங்கே கை சூம்பியவர் ஒருவர் இருந்தார். சிலர் இயேசுமீது குற்றம் சுமத்தும் நோக்குடன், ஓய்வுநாளில் அவர் அவரைக் குணப்படுத்துவாரா என்று கூர்ந்து கவனித்துக்கொண்டே இருந்தனர். இயேசு கை சூம்பிவரை நோக்கி, "எழுந்து, நடுவே நில்லும்" என்றார். பின்பு அவர்களிடம், "ஓய்வுநாளில் நன்மை செய்வதா, தீமை செய்வதா? உயிரைக் காப்பதா, அழிப்பதா? எது முறை?" என்று அவர் கேட்டார். அவர்களோ பேசாதிருந்தார்கள். அவர் சினத்துடன் அவர்களைச் சுற்றிலும் திரும்பிப் பார்த்து, அவர்களது பிடிவாத உள்ளத்தைக் கண்டு வருந்தி, கை சூம்பியவரை நோக்கி, "கையை நீட்டும்" என்றார். அவர் நீட்டினார். அவருடைய கை மீண்டும் நலமடைந்தது. உடனே பரிசேயர் வெளியேறி ஏரோதியரோடு சேர்ந்து இயேசுவை எப்படி ஒழிக்கலாம் என அவருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தனர்.

**தியானம்:** ஒரு நாணயத்திற்கு இரு பக்கப் போல் நன்மையும் தீமையும் இவ்வுலகில் சரி சமமாக இருக்கிறது. அதில் நாம் எதை தெரிவு செய்கிறோம் என்பதை பொறுத்து எமது இவ்வுலக வாழ்வு அமைகிறது. சிலரின் சிந்தனை சொல், செயல் எல்லாமே அடுத்தவர்களை அழிப்பதிலும், மற்றவர்களிற்கு தீமை செய்வதிலும் இருக்குமாயின் அவரது வாழ்வின் பயன்தான் என்ன? வாழும் கொஞ்ச காலத்தில் நல்லதை நினைப்போம். இப்போது மரணம் எந்த வயதில் வரும் என்று யாராலும் சொல்ல முடியாது, இன்று கான்சர் வியாதி எவரையும் விட்டு வைக்க வில்லை. அதனால் பலியாகும் உயிர்கள் பல. இதற்கு வயது வேறுபாடே இல்லை. சிலருக்கு ஆரம்ப கட்டத்தில் வெளிப்படுதுவதனால் ஓரளவு சிகிச்சை மூலம் மருத்துவர்கள் மரண திகதியை தள்ளி வைக்கிறார்கள். சிலருக்கு அவ்வாறு இல்லை. அதனை விடக் கொடுமை சாகப்போகிறோம் என்று நோயாளருக்கு தெரிவது. அந்த நாள் எப்போது என்ற ஏக்கத்திலே பாதிப்பேர் மடிகிறார்கள். இன்றைய வாசகங்கள் நன்மை செய்ய நம்மை அழைக்கின்றன. முதல் வாசகத்தில் இறுமாப்பு கொண்ட கோலியாத்தை , சிறுவன் தாவீது வெற்றி கொள்வதை பார்க்கிறோம். ஆடு மேய்க்கும் தாவீதிற்கு வந்த வீரம் கடவுளால் அருளப்பட்டது. நற்செய்தியில் சூம்பிய கையுடையவர் ஓய்வு நாளில் குணமாக்கப் படுவதால் யேசு விமர்சனத்திற்கு ஆளாகிறார். நன்மை செய்ய நேரம், காலம் பார்க்கக் கூடாது என்பதனை நமக்கு தெளியப் படுத்துகிறார். எனவே நாமும் நல்லதை நினைப்போம், நல்லதை செய்வோம், அடுத்திருப்போரின் தேவைகளில் உதவிக்கரம் நீட்டி, ஆறுதல் அளித்து, கண்ணீரை துடைத்து நல்லவர்களாக வாழ்வோம்